5422

பெரம்பலூர் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளரின் (வளர்ச்சி) செயல்முறைகள்
முன்னிலை: திரு.அ.ஸ்ரீராம்.

ந.க.எண்.4298/2017/பஅ2 நாள்: 29.10.2018

ஊரக வளர்ச்சி முகமை
01 NOV 2018
பெரம்பலூர்

பொருள்: பணியமைப்பு - ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகு - பெரம்பலூர் மாவட்டம் - தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்பெற்ற தொகுதி-IV தேர்வில் தெரிவு செய்யப்பட்டவர்களுள் - தட்டச்சர் பதவிக்கு - மூன்று நபர்களின் பெயர்கள் கொண்ட பட்டியல் பெரம்பலூர் மாவட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகிற்கு ஒதுக்கீடு செய்து வரப்பெற்றது - தட்டச்சராகப் பணிநியமனம் செய்யப்பட்ட மூன்று நபர்களும் பணியில் சேர்ந்துள்ளனர் - பணியில் சேர்ந்த நாள் முதல் தட்டச்சர் நிலையில் பணியை வரன்முறை செய்து உத்தரவிடுதல்.

| | |
|---|---|
| APO(W&E) | APO(I) |
| APO(H&S) | A.O |

பார்வை:

1. சென்னை தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய செயலாளரின் கடிதம் எண்.5698/PSD-A2/2017, நாள்: 03.10.2017.
2. பெரம்பலூர் மாவட்ட ஆட்சித் தலைவரின் செயல்முறைகள் ந.க.எண்.4298/2017/பஅ2, நாள்: 19.10.2017.

-----

உத்தரவு:

2015-2016 ஆம் ஆண்டுக்கான தமிழ்நாடு அமைச்சுப்பணியில் தட்டச்சர் உள்ளிட்ட பதவிகளுக்கு நேரடி தெரிவின் மூலம் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்பெற்ற தொகுதி-IV தேர்வில் தேர்ச்சி பெற்று முதல்கட்ட கலந்தாய்வில் கலந்து கொண்டவர்களுள் தட்டச்சர் பதவிக்கு பெரம்பலூர் மாவட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகிற்கு தெரிவு செய்யப்பட்ட மூன்று நபர்களின் பெயர்கள் கொண்ட பட்டியல் பார்வை 1-இல் காணும் கடிதத்துடன் வரப்பெற்றதைத் தொடர்ந்து, பார்வை 2-இல் காணும் செயல்முறைகளின்படி பெயர்ப்பட்டியலில் இடம் பெற்றுள்ள மூன்று நபர்களுக்கும் தமிழ்நாடு அமைச்சுப்பணி விதிகள் மற்றும் தமிழ்நாடு அரசுப்பணியாளர்கள் (பணிநிபந்தனைகள்) சட்டம் - 2016 பிரிவு எண்.17(1) ஆகியவற்றில் வழங்கப்பட்டுள்ள நெறிமுறைகளுக்கிணங்க, முற்றிலும் தற்காலிகமாக தட்டச்சராகப் பணி நியமனம் செய்தும், பணிவாய்ப்பு அளித்தும் உத்தரவிடப்பட்டது. மூன்று நபர்களும் பணியில் சேர்ந்து நாளது வரை தட்டச்சராகப் பணிபுரிந்து வருகின்றனர்.

இந்நிலையில், தட்டச்சர் நிலையில் முறையாக பணியில் சேர்ந்த நாள் முதல் இவர்களின் பணியை வரன்முறை செய்திட பரிசீலித்திடும் பொருட்டு, தொடர்புடைய அலுவலகத் தலைவர்களிடமிருந்து கருத்துருக்களை பெற்று கவனமாக பரிசீலிக்கப்பட்டது. தட்டச்சராகப் பணி நியமனத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட தகுதிகளை இவர்கள் முழுமையாக பெற்றுள்ளனர். பணியில் சேர்ந்த நாள் முதல் நாளது வரை இவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கைகள் ஏதும் மேற்கொள்ளப்படவில்லை.

எனவே, பின்வரும் அட்டவணையில் கலம் எண். 2-இல் குறிப்பிடப்பட்டுள்ள பணியாளர்களின் பொருட்டு, கலம் எண். 4-இல் குறிப்பிடப்பட்டுள்ள நாள் முதல் பார்வை 1-இல் காணும் கடிதத்தில் பத்தி எண். 5-இல் தெரிவிக்கப்பட்டுள்ள கீழ்க்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு தட்டச்சர் நிலையில் அவர்களது பணியை வரன்முறை செய்து இதன்வழி உத்தரவிடப்படுகிறது.

"The regularization is subject to the outcome of the WPs (if any) pending on the files of the Hon'ble High Court of Madras/Madurai Bench of the Hon'ble High Court of Madras relating to Group –IV Services /2015-2016 recruitment."

| வரிசை எண் | பணியாளர்களின் பெயர் (திருவாளர்கள்) | தற்பொழுது பணிபுரியும் பதவி மற்றும் அலுவலகம் | தட்டச்சர் நிலையில் பணிவரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|
| *1* | *2* | *3* | *4* |
| 1 | சீ.சுகன்யா | தட்டச்சர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, பெரம்பலூர். | 26.10.2017 முற்பகல் |
| 2 | அ.கார்த்திகா | தட்டச்சர், ஊராட்சி ஒன்றியம், வேப்பந்தட்டை. | 23.10.2017 முற்பகல் |
| 3 | மா.திராவிடச்செல்வி | தட்டச்சர், ஊராட்சி ஒன்றியம், ஆலத்தூர். | 23.10.2017 முற்பகல் |

மாவட்ட ஆட்சியரின் நேர்முக
உதவியாளர் (வளர்ச்சி),
பெரம்பலூர்.

ந.க.அ1/8782/2015. நாள்: 9.11.2018
நகல் சான்று செய்யப்படுகிறது

பெறுநர்

தொடர்புடைய பணியாளர்கள் - உரிய வழியாக.

நகல்: திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, பெரம்பலூர்.
நகல்: வட்டார வளர்ச்சி அலுவலர்கள் (வஊஎ/கிஊ), ஆலத்தூர்/வேப்பந்தட்டை.
நகல்: பஅ2 - இருப்பு கோப்பிற்கு.

திட்ட இயக்குனர்
மா.ஊ.வ.மு. பெரம்பலூர்